මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: MOF/GAM/2019/07
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2019.07.31

சுற்றுநிருப இல. MFMM/DFD/03/2019

மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்,

**"*கம்பெரலிய*" – துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RRDP) – 2019**

கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட 2019.01.04 ஆந் திகதிய MFMM/DFD/01/2019 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்றுநிருபத்தின்பால் உங்களது கவனத்தினை செலுத்துமாறு கோருகின்றேன்.

02. இச்செயற்றிட்டத்தினை நடைமுறையில் செயற்படுத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மக்களினால் கிராமிய மட்டத்தில் முன்வைக்கப்படும் கருத்திட்ட முன்மொழிவு செயற்படுத்துகை இலகுபடுத்தலைக் கருத்திற்கொண்டு கௌரவ பிரதமரின் தலைமையில் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, மேற்குறித்த சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய பிரிவுகள் மூலம் குறிப்பீடு செய்யப்பட்ட வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக மக்கள் பிரதிநிதிகள் குறித்த தேர்தல் தொகுதியில் கருத்திட்ட முன்மொழிவுகளை நேரடியாகப் பெற்று அவ்வாறு பெற்றுக் கொண்ட முன்மொழிவுகள் உரிய 12 விடயத் துறைகளின் கீழ் இடம்பெறுவனவா என்பதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த கருத்திட்டத்திற்கான போதிய நிதியினை மாவட்டச் செயலாளர்களுக்கு விடுவிப்பதற்கு தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. இதன்படி, 2019.01.04 ஆந் திகதிய MFMM/DFD/01/2019 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 04 ஆம் பந்தியின் (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய பிரிவுகள் தொடர்பாக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்கள் குறித்த 12 விடய துறைக்கான ஆகக்கூடிய செலவின எல்லையினை விஞ்சாத வகையில் செயற்படுவதுடன், குறித்த கருத்திட்டங்களுடன் தொடர்பான அனைத்துப் பற்றுச் சீட்டுக்களுக்குமான கொடுப்பனவுகளை 2019.09.30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

ஒப்பம்: **ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

**பிரதிகள்:**
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. செயலாளர், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்ற, புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு
4. பிரதேச செயலாளர்கள் அனைவரும்
5. கணக்காய்வாளர் நாயகம்
6. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
8. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
9. கருத்திட்டப் பணிப்பாளர், கம்பெரலிய செயலகம்